**<u>2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் சிறப்பு கூட்டப் பொருள்</u>**

**முன்னிலை:- திருமதி.M.R.வசந்தி, M.A.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

1)திண்டிவனம் நகராட்சி 2018ம் ஆண்டில் திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சியில் தனி நபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுகப்பறைகள் கட்டுதல் பணிகள் மேற்கொண்டு முழுமை அடைந்த நிலையில் தற்போது திறந்த வெளி கழிப்பிடங்களற்ற நகராட்சியாக அறிவிக்க (ODF+)க்கு 29.10.2020 அன்று மன்றத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு மக்களின் ஆட்சேபனைகளுக்காக 30.10.2020 அன்று செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டது. தற்போது எந்த வித ஆட்சேபனையும் மக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் ODF+ சான்று பெற விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.2886/2015/எச்1)

**நகராட்சி அலுவலகம்**
**நாள்:- 17.11.2020**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**
**திண்டிவனம் நகராட்சி.**

**2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் தேதி திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டப் பொருள்**

**முன்னிலை:- திருமதி.M.R.வசந்தி, M.A.,**
**தனி அலுவலர்**
**திண்டிவனம் நகராட்சி.**

**1)**மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்: ஆ6/1431/2019 நாள்:05.08.2020 ம் தேதிய செயல்முறை உத்தரவில் திண்டிவனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019–2020 ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சி கிடங்கல் 2 – ஓட்டைப் பள்ளி அருகில் அங்கன்வாடி கட்டிடம், சமையல் அறை மற்றும் குடிநீர் வசதி அமைத்தல் பணி | 10,00,000/– |

**அலுவலக குறிப்பு:–** பதிவு செய்யலாம்

**2)**அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி காவேரிப்பாக்கம் கிராமம் – வார்டு – E, பிளாக் – 11 டவுன் சர்வே எண். 2/12, 14. 3/19, 3/20, 3/21, 3/22, 3/23, 3/24, 3/25. 24/A1, 24/A2, 24/A3, 24/A4. 88/2, E13, 8/8 சர்வே எண்கள். 71/8, 71/9, 71/10, 71/11pt, 71/13, 71/14, 71/15pt, 71/16, 88/2, 70/12, 70/11pt - ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 189898.75 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **S.V.S.K நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 311/2020/விம, நாள். 04.08.2019–ல் காவேரிப்பாக்கம் கிராமம் – வார்டு – E, பிளாக் – 11 டவுன் சர்வே எண். 2/12, 14. 3/19, 3/20, 3/21, 3/22, 3/23, 3/24, 3/25. 24/A1, 24/A2, 24/A3, 24/A4. 88/2, E13, 8/8 சர்வே எண்கள். 71/8, 71/9, 71/10, 71/11pt, 71/13, 71/14, 71/15pt, 71/16, 88/2, 70/12, 70/11pt - ஆகியவற்றில் 4.36 ஏக்கர் (அ) 189898.75 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **S.V.S.K நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ (வி.ம) எண். R56/2020 என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 4.36 ஏக்கர் (அ) 189898.75 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 101 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 97 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 04 |

**பொது ஒதுக்கீடு**

பூங்கா (மனை எண். 61 பகுதி) - 662.73 ச. அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.01 %)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1805/2020/எப்1)

3)இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து இடங்களிலும் மாவட்ட ஆட்சியர்,விழுப்புரம் அவர்களின் அறிவுரைப்படி கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் பணிக்கு தொடர்ந்து கிருமி நாசினி மருந்து தெளிப்பதற்கு தேவையான Mechanical Sprayer மற்றும் வாடகை வாகனம் (வாடகை, டீசல் மற்றும் டிரைவர் சம்பளம் உட்பட) அமர்த்தப்பட்டு 01.07.2020 முதல் 14.09.2020 வரை பணிகள் செய்து முடிக்கப்பட்டதற்கு நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வருவாய் நிதியில் ரூபாய் 8,74,400/– செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

4)இந்நகராட்சியில் வார்டு எண் 07–ல் கதவு எண்16, அப்பாய் தெருவில் மனுதாரர் திரு ராமதாஸ் பெயரில் 2017–18 II அரையாண்டு முன் புதியதாக செத்துவரி எண் 043/007/00706 –ல் வரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்துவரி விதிப்பின் போது அளவீடுகள் தவறுதலாக அளக்கப்பட்டுள்ளது என வரிவிதிப்பு தாள் தொடர்ந்து நகராட்சி ஆய்வு செய்ததால் மேற்படி இடத்தை நேராய்வு செய்த பின் அளவீடு தவறுதலாக உள்ளதை கண்டறியப்பட்டது. மேற்க்கண்டவாறு சரியான அளவீடுகளை கொண்டு 2017–2018 II –ம் அரையாண்டு முதல் சொத்து வரி எண் 043/007/00766 –ல் புதியதாக வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே தவறுதலாக விதிக்கப்பட்ட சொத்துவரி எண்.043/007/00706–ஐ கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கவும் தொகை ரூ.35577/– தள்ளுபடி செய்யவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி தவறுதலாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட எண்.043/007/00706–ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்,மேலும் அதற்குரிய நிலுவை தொகை ரூ.35577/–ஐ தள்ளுபடி செய்யலாம்.

5)இந்நகராட்சியில் வார்டு எண் 07–ல் கதவு எண் 14, வால்டர் ஸ்க்டர் தெருவில் திரு B.ராஜாராம் பெயரில் புதுயதாக செத்துவரி எண் 043/007/00718 2017–2018 II அரையாண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்டது.மேற்படி சொத்துவரி விதிப்பின் போது தவறுதலாக அளவீடு செய்யப்பட்டிருப்பதாக வரிவிதிப்புதாரர் திரு.B .ராஜாராம் அவர்கள் தொடர்ந்து மனு அளித்ததால் மேற்படி இடத்தை நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி சொத்துவரி விதிப்பு தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளதிற்கு என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் தரைதளத்திற்கு ஏற்கனவே சொத்துவரி எண்.043/007/00384–ல் வரி விதிப்பு செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி சொத்துவரி விதிப்பு எண் 043/007/00718 –ஐ 1.10.2017 முதல் நீக்கம் செய்து புதியதாக முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு சொத்துரி விதிப்பு எண் 043/007/00718 ல் 2017–2018 II –ம் அரையாண்டு முதல் புதியதாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சொத்துவரி விதிப்புஎண் 043/007/00718 –ன் கேட்பு தொகை ரூ.26001/–ஐ நீக்கம் செய்ய மன்ற வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி தவறுதலாக சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட எண்.043/007/00718–ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம். மேலும் அதற்குரிய நிலுவை தொகை ரூ.26001/– நிலுவை தொகையை தள்ளுபடி செய்யலாம்.

6)இந்நகராட்சியில் மாதாந்திர குத்தகை இனங்களின் உரிமம் 2019–2020 உடன் முடிவடைந்ததால், நகர மன்ற தீர்மான எண் 54 நாள். 27.02.2020 முதல் 15 சதவீத வாடகை உயர்வு செய்யப்பட்டு 2020–2021 முதல் 2022–2023 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007 மற்றும் குத்தகைவிதிகளின்படியும் உரிமம் புதுப்பிக்கப்படாத குத்தகை இனங்களின் வைப்புத் தொகையினை ஈடுசெய்து மறு ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் வருடாந்திர குத்தகை இனங்களுக்கான உரிமம் 2018–2019 முதல் 2020–2021 முடிய குத்தகை விடப்பட்ட 1) பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2) ஆடுவதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 3)பேருந்து நிலையம் கட்டண கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் 4) நேருவீதி ஓ.பி.ஆர்.பார்க் மீன் மற்றும் இறைச்சி கடைகளில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் 5) சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடை எண் 14 முதல் 36 முடிய உள்ள கடைகளின் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் ஆகிய குத்தகை இனங்களுக்கான உரிமங்கள் 2020–2021ம் ஆண்டுடன் முடிவடைகிறது. வருடாந்திர குத்தகை இனங்களை மேலும் மூன்றாண்டுகளுக்கு 2021–2022 முதல் 2023–2024 வரை ஏலம் விடவும், மேற்கண்ட ஏல விளம்பரங்களை உரிய நாளிதழில் விளம்பரம் செய்திடவும், அறிவிக்கை நோட்டீஸ் அடித்திடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1)உரிமம் புதுப்பிக்கப்படாத மாதாந்திர குத்தகை இனங்களின் உரிமதாரர்களை செலுத்திய வைப்புத்தொகையினை ஈடுசெய்து மறு ஏலம் விட மன்றம் அனுமதிக்கலாம்.
2)வருடாந்திர குத்தகை இனங்களை ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1041/2020/அ1)

7)திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா நோய்த்தடுப்பு பணிகளை மேற்கொண்டுவரும் முன்களப்பணியாளர்களைான நகராட்சி துப்புரவுப்பணியாளர்களுக்கு தேவையான கையுறை 120 ஜோடி மற்றும் இதர பாதுகாப்பு உபகரணங்கள் அவசர அவசியம் கருதி உடனடியாக அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கி வழங்கிட ஆகும் தோராயண செலவினம் ரூ.10,0,000/–ஐ வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2938/2020/எச்1)

8)இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் TN32–M8142 டப்பர் பிளேசர் வானம் பயன்பாடின்றி உள்ளது. தற்போது கழிவு நீர் லாரி வாகனமாக மாற்றம் செய்ய டேங்கர் பொறுத்தவும் மற்றும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய 04.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | TN32–M8142 டப்பர் பிளேசர் வானம் பயன்பாடின்றி உள்ளது. தற்போது கழிவு நீர் லாரி வாகனமாக மாற்றம் செய்ய டேங்கர் பொறுத்தவும் மற்றும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல் | ரூ. 600000/– | சரவண மோகன் பெயின்டிங் ஒர்க்ஸ், 176/3எ,திருத்தனி நகர், பழைய பல்லாவரம், சென்னை – 600043. | ரூ. 596700/– |
| | | | எம்.கே.எஸ் மோட்டார்ஸ், ஸ்ரீ பரத் நகர், பிலாட் எண்.6, எண்.108/3, பல்லாவரம், சென்னை–600 117 | ரூ. 574500/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2–ல் உள்ள எம்.கே.எஸ் மோட்டார்ஸ், ஸ்ரீ பரத் நகர், பிலாட் எண்.6, எண்.108/3, பல்லாவரம், சென்னை–600 117. நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2143/2020/எச்1)

**9)**இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.1670/2010/இ1 நாள்.10/08/2017 தேதிய பணி உத்தரவின்படி M/S M.H.T. எஞ்சினியரிங் நிறுவனத்திற்கு திண்டிவனம் நகராட்சி எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணிகளுக்காக 10.08.2017 தேதி முதல் உத்தரவு வழங்கப்பட்டது. எனினும் அந்நிறுவனம் ஜனவரி–2018 முதல் பராமரிப்புபணிகள் செய்து வருகிறது. தற்போது 09.11.2020 உடன் ஒப்பந்தம் காலாவதியாக உள்ளது. அந்நிறுவனம் நல்ல முறையில் பராமரிப்பு பணிகளை செய்து வருவதாக துப்புரவு அலுவலர் சான்றளித்திருப்பதாலும் குறைந்த கட்டணத்தில் பிரேதங்களை எரியூட்டி பொதுமக்கள் நல்ல முறையில் பயனடைந்து வருவதாலும் நகராட்சி பொறியாளரின் 05.11.2020 தேதிய குறிப்பின்படி 10.11.2020 முதல் 31.01.2021 வரை மேலும் 83 நாட்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அதே கட்டண விகிதங்களில் ஒப்பந்த நீட்டிப்பு செய்து கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1670/2015/எச்1)

**10)**நகராட்சி பகுதியில் வெள்ள நீர் கால்வாய்கள் மற்றும் மழை நீர் வடிகால்களை செயின் டோசர் எந்திரம் மூலம் சீரமைக்கும் பணிக்கு 04.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை<br>ஒரு மணி நேரத்திற்கு வாடகை எரிபொருள் மற்றும் ஓட்டுனர் படி உட்பட. |
|---|---|---|
| 1 | திரு.கே. சந்தோஷ், சூர்யா எர்த் மூவர்ஸ், ரோஷனை பாட்டை திண்டிவனம் . | ரூ.1450/– |
| 2 | திரு. என். காமராஜ்,<br>தனுஸ்ரீ எர்த் மூவர்ஸ்,<br>16, பூந்தோட்டம், ஈஸ்வரன் கோவில் தெரு,<br>திண்டிவனம். | ரூ.1500/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள திரு.கே. சந்தோஷ், சூர்யா எர்த் மூவர்ஸ், ரோஷனை பாட்டை திண்டிவனம், நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவானதாக உள்ளதால் அதனை ஏற்று பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2798/2020/எச்1)

**11)**இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் TN32–Q7432 டப்பர் பிளேசர் வானம் பயன்பாடின்றி உள்ளது. தற்போது குடி நீர் லாரி வாகனமாக மாற்றம் செய்ய டேங்கர் பொறுத்தவும் மற்றும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய **04.11.2020** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் TN32–Q7432 டப்பர் பிளேசர் வானம் பயன்பாடின்றி உள்ளது. தற்போது குடி நீர் லாரி வாகனமாக மாற்றம் செய்ய டேங்கர் பொறுத்தவும் மற்றும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல் | ரூ. **480000/–** | சரவண மோகன் பெயின்டிங் ஒர்க்ஸ், **176/3**எ,திருத்தனி நகர், பழைய பல்லாவரம், சென்னை – **600043.** | ரூ. **483700/–** |
| | | | எம்.கே.எஸ் மோட்டார்ஸ், ஸ்ரீ பரத் நகர், பிலாட் எண்.**6**, எண்.**108/3**, பல்லாவரம், சென்னை–**600 117** | ரூ. **467000/–** |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். **2**–ல் உள்ள எம்.கே.எஸ் மோட்டார்ஸ், ஸ்ரீ பரத் நகர், பிலாட் எண்.**6**, எண்.**108/3**, பல்லாவரம், சென்னை–**600 117.** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2142/2020/எச்1)**

**12)**திண்டிவனம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் குப்பையில்லா நகரமாக (Garbage Free City) திண்டிவனம் நகராட்சி மூன்று நட்சத்திர அங்கீகார (THREE STAR RATING) சான்று பெற விண்ணப்பம் செய்யும் பொருட்டு பொதுமக்கள் தங்கள் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை **15** நாட்களில் தெரிவிக்க இது சம்பந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 2886/2015/எச்1)**

**13)**திண்டிவனம் நகராட்சிக்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பேரேடுகள் மற்றும் நோட்டீசுகள் பதிவேடுகள் ஆகியவற்றை கூட்டுறவு அச்சகங்களில் வாங்கிக் கொள்ளவும் அதற்குண்டான செலவினம் ரூ.**5,00,000/–** (ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மட்டும்) ந.ம.தீ.எண். **69** நாள்: **31.03.2020**–ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையில் இதுவரையில் ரூ.**383214/–** (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து மூன்றாயிரத்து இருநூற்று பதினான்கு மட்டும்) செலவிடப்பட்டுள்ளது. தற்போது, சொத்துவரி தொடர்பான கேட்பு அறிவிப்புகள் மற்றும் இதர எழுது பொருட்கள் வாங்கி வழங்குமாறு பிரிவு எழுத்தர்கள் கோரியுள்ளார்கள். மேற்கண்ட எழுது பொருட்கள் மற்றும் Stationery பொருட்கள் வாங்க தற்போது ஏற்படும் கூடுதல் தோராய செலவினம் ரூ,**3,00,000/–** (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**14)**இந்நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு துணியால் ஆன கையுறை, ஒருமுறை பயன்படுத்தும் சர்ஜிகல் கையுறை மற்றும் 3Ply Normal Mask சப்ளை செய்ய 10.11.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | | |
|---|---|---|---|---|
| | | New Baawa medical, Tindivanam | Sri Karpaga vinayaga pharma, Tindivanam | Baawa medical, Tindivanam |
| 1 | துணியால் ஆன கையுறை 1 செட் | ரூ.28/— | ரூ.25/— | ரூ20./— |
| 2 | ஒருமுறை பயன்படுத்தும் சர்ஜிகல் கையுறை 1 செட் | ரூ.11/— | ரூ.17/— | ரூ.10/— |
| 3 | 3Ply Normal Mask 1 Nos | ரூ.7/— | ரூ.8/— | ரூ.5/— |
| 4 | துணியால் ஆன முகவுறை 1 Nos | ரூ.14/— | ரூ.15/— | ரூ.12/— |

<u>அலுவலக குறிப்பு :—</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி பாவா மெடிக்கல் திண்டிவனம் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.2497/2020/எச்1)

**15)**திண்டிவனம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் 33 வார்டுகளிலும் முதிர்கொசு அழிக்கும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 11 புகைமருந்து தெளிப்பான் இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்யும் பணிகளுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொது சுகாதாரப்பணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3201/2020/எச்1)

**16)**திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு நலன் பயக்கும் வகையிலும் பொதுசுகாதாரத்தினை மேம்படுத்திடவும் தற்போது திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்படி வீடு வீடாகச் சென்று திடக்கழிவுகளை தரம்பிரித்து மக்கும்குப்பை, மக்காத குப்பை என பிரித்து சேகரிப்பதற்கு 33 மின்சார பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் தூய்மை இந்தியா திட்டத்தின்படி வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பேட்டரி வாகனங்களில் அடிக்கடி மின்சார ஒயரிங் கேபிள், பிரேக்குகள், மற்றும் மின்களங்கள் பழுது ஏற்பட்டு விடுவதால் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை முறையாக மேற்கொள்ள இயலாத நிலை ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கும், பொது சுகாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. எனவே மேற்படி 33 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் குப்பைகளை சேகரிக்க பயன்படும் வாகனங்களை (Battery operated vechicle) முறையாக பராமரித்திடும் வகையில் ஆண்டு முழுவதும் பராமரிப்பு பணிக்காக (Annual Maintenance) தகுதிவாய்ந்த நிறுவனங்களை தேர்ந்தெடுத்திடவும் மேற்படி பணிக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.7.5 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொது சுகாதாரப்பணி அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2980/2020/எச்1)

17)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண் : 188 நாள். 31.08.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பழைய நகராட்சி அலுவலகத்தில் தடுப்புகள் அமைக்கவும் , டைல்ஸ் பதிக்கவும் மற்றும் வண்ணம் பூசவும் , ஆணையர் குடியிருப்பில் புதியதாக கழிப்பறை அமைக்கும் பணி | 900000/– | Sri Vetrivel electricals | –0.08% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 0.51% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு Sri Vetrivel electricals, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

18)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண்: 246 நாள்.30.09.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வடமேற்கு பருவமழையை முன்னிட்டு Wet Mix Macadam அமைக்கும் பணி | 550000/– | எம்.தமிழ்வாணன் | –0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.ஆறுமுகம் | + 0.41% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம்.தமிழ்வாணன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

19)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண்: 222 நாள். 30.09.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு–3 ரோஷணை போலன் தெரு மற்றும் ரோஷணை ஆஸ்பிட்டல் ரோடு ஆகிய பகுதிகளில் கழிவு நீர் கால்வாய் அமைக்கும் பணி | 950000/– | பி.சரவணமூர்த்தி | –0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 2.10% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி.சரவணமூர்த்தி, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

20)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண்: 221 நாள்.30.09.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு – 9 ஈஸ்வரன் கோயில் பூந்தோட்டம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 900000/– | பி.முரளிமோகன் | –0.01% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.ஆறுமுகம் | + 0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி.முரளிமோகன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

21)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020—21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண் : 223 நாள்.30.09.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பிரிவு—2 தீர்த்தகுளம் சுகாதார அலுவலக வளாகம்,ரோஷணை சுடுகாடு மற்றும் ரோஷணை பழைய பள்ளி வளாகம் ஆகிய முள்வேலி இடங்களில் அமைக்கும் பணி | 600000/— | எம்.மாரியப்பன் | —0.29% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்.தமிழ்வாணன் | + 0.93% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :—</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம்.மாரியப்பன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

22)இந்நகராட்சியில் குடிநீர் நிதி 2020—21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண் : 185 நாள். 31.08.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு—27 ஆர்.எஸ்.பிள்ளை தெரு விரிவாக்கம், வார்டு—30 வள்ளலார் தெரு விரிவாக்கம் மற்றும் வார்டு—9 ராஜாஜி தெரு ஆகிய இடங்களில் பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணி | 460000/— | பி.சரவணமூர்த்தி | —0.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 4.77% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :—</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி.சரவணமூர்த்தி, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

23)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண்: 177 நாள். 29.07.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | அம்மா உணவகத்தில் புதியதாக 500 லிட்டர் குளிர்சாதன பெட்டி வாங்கவும் மற்றும் Exhaust fan replacement,Fall ceiling fitting repair , Burner gas hose replacement , service box fittings replacement பணி | 125000/– | Om Sakthi Electricals | –0.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 1.37% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு Om Sakthi Electricals, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

24)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண்: 245 நாள்.30.09.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | 4 MCC மையங்களில் உள்ள தொட்டிகள் பராமரிப்பு செய்யும் பணி | 400000/– | பி.சரவணமூர்த்தி | –0.07% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 2.23% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி.சரவணமூர்த்தி, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

25)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண் : 189 நாள். 31.08.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | பழைய நகராட்சி அலுவலகம் முன்புறம் பேவர் பிளாக் கற்கள் பதித்து கிரில் அமைத்து பராமரிக்கும் பணி | 500000/– | பி.ரங்கநாதன் | –0.06% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 0.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி.ரங்கநாதன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

26)இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகரமன்ற தீர்மான எண்: 187 நாள். 31.08.2020 ல் அனுமதித்துள்ளபடி, 16.10.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | புதிய நகராட்சி அலுவலகத்தில் டேபிள் மற்றும் அலமாரி அமைக்கும் பணி | 500000/– | எஸ்.ஆறுமுகம் | –0.38% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எஸ்.மோகனசுந்தரம் | + 1.23% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலககுறிப்பு :–</u>

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எஸ்.ஆறுமுகம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

27)திண்டிவனம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 300–க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருவதால் பணியாளர்களுக்கு Finger tipe pulse Oximeter மூலம் பரிசோதனை செய்ய 5 எண்ணிக்கைகள் வாங்கி வழங்கப்பட்டது. மேலும் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சியிகளின் சட்டம் 1920 விதி 15ன் கீழ் விலைப்புள்ளிகள் பெற்று நடிவடிக்கை மேற்கொண்டதையும் அதற்கான செலவினம் ரூ.13160/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.819–10/2020/எச்1)

**28)**இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணி தனியார் மூலம் நகரமன்ற தீர்மான எண்.433 நாள் 27.09.2013–ல் அனுமதி பெறப்பட்டது. அதன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய எம்/எஸ் ராம் எண்டர்பிரைசஸ் நாகர்கோயில் என்ற நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொடர்ந்து ஒப்பந்த காலம் பின்வருமாறு நீடிக்கப்பட்டு 31.12.2020–அன்று முடிவடையயுள்ளது.

| வரிசை எண் | நகர மன்ற தீர்மான எண் தேதி | ஒப்பந்த காலம் |
|---|---|---|
| 1 | 433 / 27.09.2013 | 01.01.2014 முதல் 31.12.2014 வரை |
| 2 | 484 / 26.12.2014 | 01.01.2015 முதல் 31.12.2015 வரை |
| 3 | 608 / 28.01.2016 | 01.01.2016 முதல் 31.12.2016 வரை |
| 4 | 1075 / 31.01.2017 | 01.01.2017 முதல் 31.03.2017 வரை |
| 5 | 1153 / 31.05.2017 | 01.04.2017 முதல் 31.08.2017 வரை |
| 6 | 1271 / 28.09.2017 | 01.09.2017 முதல் 30.11.2017 வரை |
| 7 | 1374/30.11.2017 | 01.12.2017 முதல் 28.02.2018 வரை |
| 8 | 53/28.02.2018 | 01.03.2018 முதல் 31.08.2018 வரை |
| 9 | 243/07.09.2018 | 01.09.2018 முதல் 30.11.2018 வரை |
| 10 | 331/12.11.2018 | 01.12.2018 முதல் 31.12.2018 வரை |
| 11 | /31.12.2018 | 01.01.2019 முதல் 31.01.2019 வரை |
| 12 | /30.01.2019 | 01.02.2019 முதல் 28.02.2019 வரை |
| 13 | 60/28.02.2019 | 01.03.2019 முதல் 30.06.2019 வரை |
| 14 | 162/28.06.2019 | 01.07.2019 முதல் 30.09.2019 வரை |
| 15 | 288/27.09.19 | 01.10.2019 முதல் 31.12.2019 வரை |
| 16 | 380/31.12.19 | 01.01.2020 முதல் 30.06.2020 வரை |
| 17 | 138/30.06.2020 | 01.07.2020 முதல் 31.12.2020 வரை |

மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்த பணி காலம் 31.12.2020–யுடன் முடிவடைவதால் மேற்படி பணியின் ஒப்பந்ததாரர் தனது 11.11.2020 ம் தேதிய கடிதத்தில் 19.11.2013ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் கால நீடிப்பு செய்து வழங்குமாறு கடிதம் வழங்கியுள்ளார்.

மேற்கண்ட தெருவிளக்கு பராமரிப்பு பணியை தற்போது தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொண்டு வரும் எம்/எஸ் ராம் எண்டர்பிரைசஸ் நாகர்கோயில் நிறுவனத்திற்கு 19.11.2013ல் பெறப்பட்ட விலை விகிதத்திலேயே ஒப்பந்தத்தை 01.01.2021 முதல் 30.06.2021 வரை கால நீடிப்பு செய்து மேற்படி பணியினை மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூபாய் 1263450/– நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண் : 2187/2013/இ2

**29)**இந்நகராட்சி பகுதியில் உள்ள உள்ள திறந்த வெளி கிணறுகள்,சின்டெக்ஸ் தொட்டிகள் மற்றும் புதிய வடவாம்பலம் குடிநீர் திட்டத்தில் பெறப்படும் குடிநீர் ஆகியவற்றிற்கு குளோரினேஷன் செய்ய தேவையான Liquid Cholorine சப்ளை செய்வதற்கு நகர மன்ற தீர்மான எண் : 346 நாள்: 29.11.19 ல் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் திரு.எஸ்.மோகனசுந்தரம் ஒப்பந்ததாரர் 05.11.2020ம் தேதிய கடிதத்தில் சப்ளை செய்ய அனுமதி வழங்க கோரியுள்ளதை தொடர்ந்து 20.11.19ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் சப்ளை செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**30)**இந்நகராட்சி கண்டரக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 5 ஆழ்துளை கிணறுகளிலிருந்து **01.09.19** முதல் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் திட்ட பராமரிப்பு பணிக்கு நகர மன்ற தீர்மான எண் : **112** நாள் : **30.03.2015**–ல் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து **28.04.2015** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் அடிப்படையில் திரு.S.மோகனசுந்தரம் ஒப்பந்ததாரரால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு தொடர்ந்து ஒப்பந்த காலம் பின்வருமாறு நீடிக்கப்பட்டு **31.12.2020**–அன்று முடிவடைய உள்ளது. ஒப்பந்ததாரர் தனது **09.11.2020** ம் தேதிய கடிதத்தில் **28.04.2015**ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் கால நீடிப்பு செய்து வழங்குமாறு கடிதம் வழங்கியுள்ளார்.மேற்படி பராமரிப்பு பணியை ஒப்பந்ததாரர் நல்ல முறையில் செய்து வருகிறார்.

| வரிசை எண் | நகர மன்ற தீர்மான எண் தேதி | ஒப்பந்த காலம் |
|---|---|---|
| 1 | 208/29.05.15 | 01.06.2015 முதல் 30.05.2016 வரை |
| 2 | 958/29.07.16 | 01.06.2015 முதல் 30.05.2016 வரை |
| 3 | 1217/31.07.17 | 01.06.2017 முதல் 30.11.2017 வரை |
| 4 | 58/28.02.18 | 01.12.2017 முதல் 31.05.2018 வரை |
| 5 | 160/24.05.18 | 01.06.2018 முதல் 31.12.2018 வரை |
| 6 | 367/30.12.18 | 01.01.2019 முதல் 31.12.2019 வரை |
| 7 | 312/29.11.19 | 01.01.2020 முதல் 31.12.2020 வரை |

எனவே கண்டரக்கோட்டை தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார்கள் **01.09.19** முதல் இயக்கப்பட்டு வருவதாலும் , அதற்கான பராரிப்பு பணி மற்றும் கூட்டேரிப்பட்டு நீருந்து நிலையத்தில் பகல் மற்றும் இரவு நேர காவல் பணிகளுக்கு ஆட்களை நியமிக்கவும் **28.04.2015**–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதப்படி 01.01.2021 முதல் 31.12.2021 வரை திரு.S.மோகனசுந்தரம் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி நீட்டிப்பு வழங்கவும் , அதற்கான செலவீனம் ரூபாய் **12,00,000/–** க்கும் அதனை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**31)**இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் நாய் பயனிக்க பயன்படுத்தப்படும் TN16–A8653 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய **24.11.2020** அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள தொகை |
|---|---|---|---|---|
| 1 | TN16–A8653 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல். | ரூ. 50000/– | ஓம் சக்தி இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், நெல்லிக்குப்பம், மெயின்ரோடு, காராமணிக்குப்பம், கடலூர் மாவட்டம். | ரூ. 49500/– |
| | | | விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ், நெல்லிக்குப்பம் மெயின் ரோடு, சிட்கோ, செம்மண்டலம், கடலூர். | ரூ. 52000/– |

**<u>அலுவலக குறிப்பு :–</u>**

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். **1**–ல் உள்ள ஓம் சக்தி இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், நெல்லிக்குப்பம், மெயின்ரோடு, காராமணிக்குப்பம், கடலூர் மாவட்டம். நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1410/2020/எச்1)

32)திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கும் வணிகப் பெருமக்களுக்கும் திறந்தவெளியில் மலஜலம் கழிப்பதை தடைசெய்யப்பட்டுள்ளது குறித்தும், பொது இடங்களில் குப்பைகள் கொட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது குறித்தும், மக்கும் குப்பை மக்காத குப்பைகளை ஆரம்ப நிலையிலேயே பிரித்து கொடுக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியும், பொதுக் கழிப்பிடத்தையும், சமுதாயக் கழிப்பிடங்களை முறையாக பயன்படுத்துவது குறித்தும் பிளாஸ்டிக் பைகள் தடைசெய்யப்பட்டுள்ளது குறித்தும் டெங்கு நோய்த்தடுப்பு மற்றும் இதர பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு விழிப்புணர்வு பாதைகள், கைப்பிரதிகள் சுவரொட்டிகள் அச்சடித்து பொதுமக்களுக்கு விநியோகிக்கவும், பொது இடங்களில் விளம்பரப்படுத்திடவும், ஸ்டிக்கர் ஒட்டவும், சமுதாயக் கழிப்பிடம், பொதுக்கழிப்பிடத்தில் விழிப்புணர்வு பாதைகள் வைக்கவும், சுவரொட்டிகள் அச்சடிக்கப்படுவதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3367/2020/எச்1)**

33)இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பூமி பூஜை விழாவினை துவக்கி வைக்க வருகை தரும் மாண்புமிகு.சட்டம்,நீதித்துறை,சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் அவர்களை வரவேற்று தினசரி நாளிதழ்களில் வரவேற்பு விளம்பரம் செயப்பட்டதற்கு விளம்பரக்கட்டணம் ரூபாய் ரூ 41500.00க்கு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது..

| தினசரி நாளிதழ் பெயர் | விளம்பரக்கட்டணம் தொகை |
|---|---|
| மாலை தமிழகம் | 12600.00 |
| தினமலர் | 20000.00 |
| தினதந்தி | 18900.00 |

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

34)மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 19.03.2020 அன்று சட்டப்பேரவையில் விதி எண் 110ன் கீழ் தமிழகம் முழுவதுமுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் போதிய இடவசதி உள்ள பூங்காக்களில் இளைஞர்கள் மற்றும் அனைத்து வயதினரும் உடற்பயிற்சி மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் திறந்தவெளி உடற்பயிற்சி கூடம் அமைக்க அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் படி திண்டிவனம் நகராட்சியில் திருவள்ளுவர் நகர் பகுதி பூங்காவில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் அமைப்பதற்கும் அதற்கான மதிப்பீடு ரூ. 2,00,000/–க்கும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**நகராட்சி அலுவலகம்**
**நாள்:- 30.11.2020**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**
**திண்டிவனம் நகராட்சி.**